## இலங்கை புகையிரத திணைக்களம்

## தங்குமிட பங்களா உதவியாளர் பதவி தொடர்பில் விண்ணப்பங்களை கோரல் - 2026

1. இலங்கை புகையிரத திணைக்களத்தில் அமைந்துள்ள தங்குமிட விடுதிகள் தொடர்பில் 20 தங்குமிட பங்களா உதவியாளர்களை ஆட்சேர்ப்பு செய்வ தற்காக ஏற்புடைய தகைமைகளைக் கொண்ட இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. **ஆட்சேர்ப்பு செய்வதற்கான தகைமைகள்:**

2.1 **கல்விசார் தகைமைகள்**:

கல்விப் பொதுதராதர (சாதாரண தர) பரீட்சையில் இரண்டு தடவைகளை விஞ்சாத வண்ணம் இரு(02) திறமை சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

2.2 **தொழிற்சார் தகைமைகள்**:

துறைசார்ந்து பெற்றுள்ள தொழிற்சார் தகைமைகள் விசேட தகைமையாக கருதப்படும்.

2.3 **அனுபவம்**:

துறைசார்ந்து பெற்றுள்ள அனுபவம் விசேட தகைமையாக கருதப்படும்.

2.4 **உடல்சார் தகைமைகள்**:

அனைத்து விண்ணப்பதாரிகளும் இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் சேவை புரிவதற்க்கும் பதவியில் கடமை புரிவதற்க்கும் தேவையான உடல் மற்றும் உள ரீதியான பொருத்தப்பாட்டினை கொண்டிருத்தல் வேண்டும்.

2.5 **வயதெல்லை:**

விண்ணப்பக் கோரல் அறிவித்தலிற்கமைய விண்ணப்பங்களை பொறுப்பேற்கும் இறுதித் திகதிக்கு 18 வயதினை விட குறையாமலும் 45 வயதினை விஞ்சாதும் இருத்தல் வேண்டும்.

2.6 **வேறு தகைமைகள்:**

I. இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.

II. விண்ணப்பதாரிகள் சிறந்த நன்னடத்தையை கொண்டவர்களாய் இருத்தல் வேண்டும்..

III. பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு கருத்திற் கொள்ளப்படுகின்ற அனைத்து தகைமைகளையும் விண்ணப்பக் கோரல் அறிவித்தலின் இறுதி திகதிக்கு முன்னதாக அனைத்து வகையிலும் நிறைவு செய்திருத்தல் வேண்டும்.

3. **பதவிக்குரிய சம்பள அளவுத்திட்டம்:**

3.1 **சம்பள குறியீட்டு இலக்கம்:**

பொது நிர்வாக சுற்றறிக்கை 10/2025 இல் காட்டப்பட்டுள்ளவாறு சம்பள குறியீட்டு இலக்கம் PL 1 -2025

3.2 **சம்பள அளவீடு:**

ரூ. 40,000.00 - 10 x 450 -10 x 490 - 10 x 540 - 12 x 590 - 61,880.00 (மாதாந்த) ஆகுமென்பதோடு அச் சம்பளம் உமக்கு 2027.01.01 ஆம் திகதி தொடக்கமே கிடைக்கப் பெறும். நியமனம் அமுலுக்கு வருகின்ற திகதி தொடக்கம் இச் சுற்றறிக்கையின் III ஆவது அட்டவணையின் ஏற்பாடுகளுக்கமைய தங்களுக்கு சம்பளம் செலுத்தப்படும்.மேற்கூறிய நியமன திகதியிலிருந்து 03 வருட காலம் செல்வதற்கு முன்னர் வினைத்திறன் தடைகாண் பரீட்சைக்கு தோற்ற வேண்டும்)

4. **சேவை நிபந்தனைகள்:**

4.1 இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்துக்குரியதாகும். ஓய்வூதிய முறை தொடர்பில் அரசினால் இன்னகத்து மேற்கொள்ளப்படுகின்ற தீர்மானத்திற்கு தங்கள் கீழ்படிய வேண்டும்

4.2 இப்பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுகின்றவர்கள் நாட்டில் எப் பிரதேசத்திலும் அமைந்துள்ள புகையிரத திணைக்களத்திற்குரிய தங்குமிட பங்களாக்களில் சேவை புரிவதற்கு பொருந்தியிருக்க வேண்டும்.

4.3 தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரிகள் பதவிக்கு ஏற்புடைய ஆட்சேர்ப்பு திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கும், தாபனக் கோவை, நிதி பிரமாணங்கள்,அரச சேவை ஆணைக்குழுவின் நடைமுறைக் கோவையின் விதிகளுக்கு மற்றும் புகையிரத திணைக்களத்தின் விதிகள், சுற்றறிக்கைகள் மற்றும் சட்டதிட்டங்களுக்கு கீழ்படிய வேண்டும்.

4.4 இப்பதவிக்கு நியமிக்கப்படுகின்ற உத்தியோகத்தர்கள் நியமன திகதியிலிருந்து மூன்று (03) வருட கால தகுதிகூர் காண் காலத்திற்கு கீழ்படிய வேண்டும்.

4.5 பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டதன் பின்னர் தாங்கள் நியமிப்பிற்கான தகைமைளை நிறைவு செய்துள்ள மொழி மூலத்திற்கமைய மூன்று (03) வருட காலத்திற்குள் பொது நிர்வாக சுற்றறிக்கை 18/2020 மற்றும் இடைநேரான சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளுக்கமைய அரசகரும மொழி தேர்ச்சியினைப் பெற்றுக் கொள்ள வேண்டும்..

5. **ஆட்சேர்ப்பு செய்யப்படும் முறை :**

மேலே 02 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள், தகைமைகளை மதிப்பிடும் நேர்முக பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு அதிக்கூடிய புள்ளிகளை பெற்றுக்கொள்ளும் முறைக்கமைய வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவர். தகைமைகளை மதிப்பிடும் நேர்முக பரீட்சை தொடர்பில் கீழ்வருமாறு புள்ளிகள் வழங்கப்படும்.

| *புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புக்கள்* | *அதி கூடிய புள்ளிகளின் அளவு* |
|---|---|
| மேலதிக கல்வித் தகைமைகள் | 20 |
| தொழிற்சார் தகைமைகள் | 25 |
| பதவிக்கு ஏற்புடையவாறு பெற்றுள்ள அனுபவம் | 40 |
| வெளிவாரி திறன் செயற்பாடுகள் | 10 |
| நேர்முக பரீட்சையில் வெளிக்காட்டப்படும் திறமை | 05 |
| மொத்தம் | 100 |

5.1 தகைமைகளை மதிப்பிடும் நேர்முக பரீட்சை தொடர்பில் புள்ளி வழங்கப்படும் விதம் விபரமாக கீழே காட்டப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| மேலதிக கல்வித் தகைமைகள் (மொத்த புள்ளிகள் 20)<br>அடிப்படை கல்வி தகைமைகளுக்கு புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது. (கல்விப் பொது தராதர (சாதாரண தர) பரீட்சையில் இரண்டு தடவைகளை விஞ்சாத வண்ணம் இரு(02) திறமை சித்திகளுடன் ஆறு(06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல். | புள்ளிகள் |
| கபொ.த. சாதாரண தர பரீட்சையில் இரு(02) திறமை சித்திகளை விடவும் திறமை சித்திகளை பெற்றுள்ள ஒவ்வொரு பாடம் தொடர்பிலும் 02 புள்ளிகள் வீதம் அதிக்கூடியளவில் 05 பாடங்களுக்கு | 10 |
| கபொ.த. உயர் தர பரீட்சையில் சித்தியடைந்துள்ள பாடமொன்று தொடர்பில் 01 புள்ளி வீதமும் திறமை சித்திகளை பெற்றுள்ள பாடமொன்றிற்காக 02 புள்ளிகள் வீதமும் 03 பாடங்களுக்காக (ஆங்கில பாடத்தினை தவிர்த்து) | 6 |
| ஆங்கில பாடம் தொடர்பில் பெற்றுள்ள சான்றிதழ்கள்/டிப்ளோமா பாடநெறி தொடர்பில் | 2 |
| வேறு மொழிகள் தொடர்பில் பெற்றுள்ள சான்றிதழ்கள்/டிப்ளோமா பாடநெறி தொடர்பில் | 2 |
| தொழிற்சார் தகைமைகள்(மொத்த புள்ளிகள் 25)<br>அங்கீகரிக்கப்பட்ட நிறவமொன்றில் உணவுளை தயாரித்தல்(Professional Cookery), ஹோட்டல், வைத்தியசலை, அலுவலகங்கள் மற்றும் வீடுகள்போன்ற இடங்களில் துப்புரவு பணி மற்றும் பராமரிப்பு (Housekeeping Services), ஹோட்டல்,உணவகங்கள், உணவுகளை வழங்குகின்ற இடங்களில் உணவுகளை வழங்குதல் மற்றும் விருந்தினரை உபசரித்தல்(Food & Beverage Associate/ Crew member) அல்லது பதவிக்கு ஏற்புடைய தறை சார்ந்து பெற்றுள்ள திறன் கருத்திற் கொள்ளப்படும்.( பெற்றுள்ள உயர்ந்த தேனும் ஒரு திறனுக்கு மாத்திமே புள்ளிகள் வழங்கப்படும்) | புள்ளிகள் |
| மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட NVQ 04 அல்லது அதற்கு மேலான பாடநெறி தொடர்பில் | 25 |

| | |
|---|---|
| மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட NVQ 03 பாடநெறி தொடர்பில் | 20 |
| வேறு பாடநெறிகள் தொடர்பில் | 10 |
| <u>பதவிக்கு ஏற்புடையவாறு பெற்றுள்ள அனுபவம்(மொத்த புள்ளிகள் 40)</u><br>நிறுவனம்,ஹோட்டல், தங்குமிட பங்களாக்கள்,வைத்தியசாலைகள், களஞ்சிய துறையில் துப்புரவு பணி , கூட்டுதல்,வெக்கும்செய்தல், கழுவுதல்,மொப் செய்தல், குளியலறைகளை துப்பரவு செய்தல் மற்றும் படுக்கையறைகளை துப்புரவு செய்தல் மற்றும் ஒழுங்காக வைத்தல்,தளபாடங்கள், ஏனைய கருவிகளை துப்புரவு செய்தல் மற்றும் பராமரித்தல், பொருட்களை கட்டளையிடுதல் மற்றும் குறிப்பெழுதுதல், உணவு சமைத்தல், உபசரித்தல், கழிவுகளை உரிய முறையில் அகற்றல் அல்லது பதவிக்கு ஏற்புடைய துறை சார்ந்து பெற்றுள்ள சேவை அனுபவம் கருத்திற் கொள்ளப்படும். (சேவை அனுபவம் தொடர்பில் முன்வைக்கப்படுகின்ற 02 சேவை சான்றிதழ்கள் மாத்திரம் கருத்திற் கொள்ளப்படும்) | புள்ளிகள் |
| சேவை அனுபவம் 04 வருடங்கள் அல்லது அதனை விடவும் அதிகம் எனில் ஒரு சேவை சான்றிதழுக்கு 20 புள்ளிகள் வீதம் இரண்டு (02)சேவை சான்றிதழ்களுக்கு) | 40 |
| சேவை அனுபவம் 02 வருடங்கள் அல்லது அதனை விடவும் அதிக 04 வருடங்களுக்கு குறைந்தது எனில் ஒரு சேவை சான்றிதழுக்கு 10 புள்ளிகள் வீதம் இரண்டு (02)சேவை சான்றிதழ்களுக்கு) | 20 |
| சேவை அனுபவம் 01 வருடம் அல்லது அதனை விடவும் அதிக 02 வருடங்களுக்கு குறைந்தது எனில் ஒரு சேவை சான்றிதழுக்கு 05 புள்ளிகள் வீதம் இரண்டு (02) சேவை சான்றிதழ்களுக்கு) | 10 |
| சேவை அனுபவம் 06 மாதங்கள் அல்லது அதனை விடவும் அதிக 01 வருடத்தினை விடவும் குறைந்தது எனில் ஒரு சேவை சான்றிதழுக்கு 2.5 புள்ளிகள் வீதம் இரண்டு (02) சேவை சான்றிதழ்களுக்கு) | 05 |
| <u>வெளிவாரி திறன் செயல்பாடுகள்(மொத்த புள்ளிகள் 10)</u> | புள்ளிகள் |
| விளையாட்டு/மாணவ படைவீர்கள் போன்ற திறமைகள் தொடர்பில் பெற்றுள்ள இரண்டு சான்றிதழ்களுக்கு 02 புள்ளிகள் வீதம் | 4 |
| அழகியற் துறை சார் திறமைகளுக்காக பெற்றுள்ள அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழொன்றிற்காக | 2 |
| சமூக சேவை நடவடிக்கைகள் தொடர்பிலான சான்றிதழ்கள்/ சமய வகுப்பு போட்டிப் பரீட்சை சான்றிதழொன்றுக்காக | 2 |
| மேலே புள்ளிகள் தொடர்பில் முன்வைக்கப்படாத வேறு திறமைகள் தொடர்பில் பெற்றுள்ள அங்கீகரிக்கப்படக் கூடிய சான்றிதழொன்றுக்காக | 2 |
| <u>நேர்முக பரீட்சையில் வெளிக்காட்டும் திறமை(மொத்த புள்ளிகள் 5)</u> | புள்ளிகள் |
| தொலைதொடர்பாடல் – தெளிவாக, கண்ணியமாக ,நம்பிக்கையுடன் கதைத்தல் | 2 |
| செவிமடுத்தல் – நன்றாக செவிமடுத்தல் மற்றும் புரிந்துக்கொள்ளல் | 2 |
| சிறந்த சித்தரிப்பு -பொருத்தமான உடை, அங்க அசைவு பாவனை மொழி,மற்றும் தன்மை | 1 |

மேலே புள்ளி வழங்குவதற்கு கருத்திற்கொள்ளப்படுகின்ற அனைத்து தகைமைகளும் (நேர்முக பரீட்சையில் வெளிக்காட்டும் திறமையை தவிர்த்து) விண்ணப்பக் கோரலின் இறுதி தினத்திற்கு நிறைவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்)

6. **விண்ணப்பிக்க வேண்டிய முறை :**

6.1 கீழே காட்டப்பட்டுள்ள மாதிரி படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 2026 .............................. ஆம் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் " புகையிரத பொதுமுகாமையாளர், புகையிரத தலைமையகம், த.பெ. இல. 355 ஒல்கோட் மாவத்தை,கொழும்பு 10. எனும் முகவரிக்கு கிடைக்கும் வண்ணம் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும். விண்ணப்பத்தினை இடும் உறையின் இடது பக்க மூலையின் மேல் தங்குமிட பங்களா உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்தல் – 2026 என குறிப்பிடப்பட வேண்டும். முழுமையற்ற விண்ணப்பங்கள் மற்றும் குறித்த திகதிக்கு பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றமை தொடர்பில் அறிவிக்கப்பட மாட்டாது. அத் திகதிக்கு பின்னர் கிடைக்கப் பெறும் எந்தவொரு விண்ணப்பமும் பொறுப்பேற்கப்பட மாட்டாது.

6.2 விண்ணபத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பமானது அரச பாடசாலையொன்றின் அதிபரொருவரை, சமாதான நீதவான் ஒருவரை,சத்திய பிரமாணம் செய்த ஆணையாளரொருவரை, சட்டத்தரணியொருவரை, பிரசித்த நொத்தாரிஸ் ஒருவரை முப்படையின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரொருவரை, பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள பதவியினையுடைய உத்தியோகத்தரொருவரை, அல்லது அரச அல்லது மாகாண அரச சேவையின் நிரந்தர பதவி நிலை தரத்தின் உத்தியோகத்தரொருவரை அல்லது பௌத்த விகாரையொன்றின் விகாரபதி அல்லது தலைமை புத்த பிக்கு ஒருவரை அல்லது பிற மத புனித தளமொன்றின்பொறுப்பு அல்லது குருவாக ஏற்றுக் கொள்ளக்கூடிய நிலையினை வகிக்கும் ஒருவரைக் கொண்டு உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

6.3 தற்போது அரச/ அரச சார்பு மற்றும் மாகாண அரச சேவையில் சேவை புரிகின்ற மேலே 02 இன் கீழ தகைமைகளை நிறைவு செய்துள்ள உத்தியோகத்தர்களுக்கும் இப் பதவி தொடர்பில் விண்ணப்பிக்க முடியும். அவ்வாறான விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பத்தினை தமது பிரிவின் தலைவரின் ஊடாக அனுப்பி வைக்க வேண்டும்.

7. இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயமொன்று காணப்படுமேயானால் அது தொடர்பில் புகையிரத பொது முகாமையாளரினால் தீர்மானிக்கப்படும். அனைத்து விண்ணப்பதாரிகளும் இவ் வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள பொது சட்டதிட்டங்களுக்கமைய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பொருந்தியிருத்தல் வேண்டும். மேலும் சிங்கள, ஆங்கில மற்றும் தமிழ் மொழியில் பிரசுரிக்கப்படும் இவ் அறிவித்தலில் மொழிகளுக்கிடையில் ஏதேனும் வேறுபாடு மற்றும் இணக்கப்பாடற்ற தனமை காணப்படுவதாக தோன்றுமிடத்து அவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்கள மொழியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்

ரவிந்திர பத்மப்பிரிய,
புகையிரத பொதுமுகாமையாளர்.

இலங்கை புகையிரத திணைக்களம்
ஒல்கோட் மாவத்தை,
த.பெ.இல. 355,
கொழும்பு 10,
2026, யூலை 14.